இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 24-09-2024

# நம் பெருமையின் நூற்றாண்டு!

***தமிழினத் தலைவர் கலைஞருக்கு நூற்றாண்டு -**

*** சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு -**

* **குடிஅரசு இதழின் நூற்றாண்டு -** என்ற இந்த வரிசையில் நம் பெருமையின் நூற்றாண்டு என்று சொல்லத்தக்க வகையில் சிந்துச் சமவெளி அறிவிப்பின் நூற்றாண்டாகவும் இது அமைந்துள்ளது.

ஆரியர் நாகரிகமே இந்தியர் நாகரிகம் என்றும், வேதகால நாகரிகமே சிறந்தது என்றும் 'கப்சா' வரலாறுகளை விட்டுக் கொண்டிருந்ததற்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஆராய்ச்சிதான் சிந்துச் சமவெளிப் பண்பாட்டின் கண்டுபிடிப்பாகும்.

**"ஜான் மார்ஷல் திராவிடப் பண்புகளை ஆய்ந்தறிந்து கூறிய போது தான் மேனாட்டாரின் கண்களில் இருந்த கறையும், கருத்தில் இருந்த மாசும் நீங்கியது. ஆரியம், திராவிட நாகரிகத்தை எவ்வளவு பாழ்படுத்தியது என்ற ஆராய்ச்சி அதன்பிறகு தான் வரத் தொடங்கியது"** என்று 'ஆரியமாயை' நூலில் எழுதினார் பேரறிஞர் அண்ணா.

சிந்துச் சமவெளி பண்பாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்திய நாள் 20.9.1924. இதுதான் தமிழ் - தமிழர் பண்பாட்டுப் பெருமையை உலகம் அறிந்த நாளாகும். இதனை உலகுக்குச் சொன்னவர் ஜான் மார்ஷல். இந்திய தொல்லியல் துறையின் அன்றைய இயக்குநர் அவர். ஹரப்பா, மொகஞ்சதாரோ குறித்த ஆய்வு முடிவுகளை அவர்தான் வெளியிட்டார். **"சிந்து, பஞ்சாப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் முதிர்ந்த பண்பாட்டுடனும், உயர் தரமான நகர நாகரிகங்களுடனும் வாழ்ந்திருக்கிறார்கள். உயர் தரமான கலையும், கலைத் திறனும், வளமான எழுத்தறிவும் கல்வி அறிவும் அவர்களுக்கு இருந்துள்ளது"** என்பதை அவர் தான் அறிவித்தார். இது கி.மு. 3500-1700 ஆகிய ஆண்டுகளாக இருக்கும் என்றும் சொன்னார்.

அப்போதே திராவிட இயக்க மூதறிஞர்களில் ஒருவரான சாத்தான்குளம் இராகவன் அவர்கள், 'ஆதிச்சநல்லூரும் பொருநை வெளிநாகரிகமும்' என்ற புத்தகத்தை எழுதினார். 'சிந்து வெளிநாகரிகம் பற்றி நான் அப்போது தந்தை பெரியாரிடம் பேசினேன்' என்று சாத்தான்குளம் இராகவன் எழுதி இருக்கிறார். கா.அப்பாத்துரையார் தொடர்ச்சியாக இது பற்றி எழுதினார். மா.இராசமாணிக்கனார், தேவநேயப் பாவாணர் ஆகியோர் தமிழர்தம் தோற்றம் குறித்து எழுதினார்கள்.

ஹரப்பா நகரம் முதலில் கண்டறியப்பட்டது. மக்கள் பொதுவெளியில் கூடும் பெரிய அரங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. அழகிய பின்னலாடைகள் இருந்தது. செங்கல் கட்டடங்கள் இருந்தன. அணிகலங்கள் கொண்ட நடனமாது சிலை கிடைத்தது. அடுத்து கண்டு பிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோவில் முன்னோர்கள் புதைக்கப்பட்ட இடங்கள் இருந்தன. தாய் தெய்வங்கள் இருந்தன. மக்கள் வாழ்ந்த குடியிருப்புகள் இருந்தன. கருப்பு, சிவப்பு நிறப் பாண்டங்கள் அதிகம் கிடைத்தன. இவை அனைத்தும் அன்றைய அழகிய நாகரிகத்தைச் சொன்னது.

கீழடியில் நாம் கண்டறிந்தவை சங்க இலக்கியக் காட்சிகளாக இருக்கின்றன. அதே போல், சிந்துச் சமவெளியில் கண்டவையும் சங்க இலக்கியத்தின் சாட்சியங்களாக இருப்பதுதான் நம்முடைய பெருமை ஆகும். அங்கு கண்டெடுக்கப்பட்ட எழுத்துகளை படிக்க முடியவில்லை. ஆனால், தமிழ் எழுத்துகளோடு ஒன்றிணைந்து இருக்கின்றன, அங்கு கண்டறியப்பட்ட முத்திரைகள், தமிழ் ஓவியங்களைப் போலவே இருக்கின்றன. **'சிந்துச் சமவெளியில் பேசப்பட்ட மொழி இன்றைய திராவிட மொழிகளுக்கு முன்னோடியாகக் கருதத்தக்கது. சிந்துச் சமவெளி வீழ்ச்சிக்குப் பின்னர் தான் ஆரியக் குடியேற்றம் நடைபெற்றது'** என்று பின்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆய்வாளர் அஸ்கோ பர்போலா சொல்லி இருக்கிறார். இது குறித்து நாற்பது ஆண்டுகள் ஆய்வு செய்தவர் இவர். **'சங்க இலக்கியம் சொல்லும் பண்பாடும் சிந்துச் சமவெளி காட்டும் முத்திரைகளும் ஒன்று போல இருக்கின்றன'** என்று ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

இந்த ஹரப்பா பண்பாட்டு மக்கள் ஏற்கனவே இங்கிருந்த தொல் தென்னிந்திய மூதாதையருடன் கலந்து தென்னிந்திய மரபணு மக்கள் தொகை உருவானதாக மானுடவியல் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

சிந்துச் சமவெளிப் பண்பாடு என்பது குஜராத், பஞ்சாப், அரியானா ஆகிய இந்திய மாநிலங்களில் மட்டுமல்லாது, முந்தைய இந்தியாவுக்குள் இருந்த பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வரை ஒற்றுமையாக உள்ளது.

'சிந்து முதல் வைகை வரை' நூலாசிரியரான ஆர்.பாலகிருஷ்ணன், இடப்பெயராய்வு முறைப்படி ஆராய்ந்துள்ளார். நாம் பயன்படுத்தும் முக்கியமான தமிழ்ச் சொற்களில் பெரும்பாலானவை சிந்துவெளிப் பகுதியாக முன்பு இருந்த பகுதிகளில் இப்போதும் பயன்படுத்தப்படும் சொற்களாக இருக்கின்றன என்பதை ஆராய்ந்து சொல்லி இருக்கிறார் ஆர்.பாலகிருஷ்ணன்.

**கொற்கை, வஞ்சி, தொண்டி, ஊர், பட்டி, பள்ளி, பாரி, பேகன், கரிகாலன், சோழன், சேரல், உதியன்,மாறன், சாத்தனார், கபிலர், நக்கீர, கோட்டை, வேல்,** ஆகிய சொற்கள் மருவிய சொற்களாக இன்னமும் பாகிஸ்தான், ஆப்கன் ஆகிய நாடுகளிலும் இந்தியாவில் குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலும் பயன்பாட்டில் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார். கண்ணகி தெய்வமாக தமிழ் மரபில் இருப்பதைப் போல குஜராத்தில் கண்கை கோவிலும், கண்கேஸ்வரி கோவிலும் உள்ளதாகச் சொல்கிறார். மொகஞ்சதாரோ பெண்கள் சிலம்பு அணிந்துள்ளார்கள்.

சிந்து வெளியில் 'காளைகள்' தான் இருந்தன. இது திராவிடச் சின்னம் ஆகும். ஆரியச் சின்னம் என்பது, 'குதிரை'கள். குதிரையையும், சக்கரம் பொருத்திய தேரையும் ஆரியச் சின்னமாகச் சொல்வார்கள். இவை சிந்து வெளியில் இல்லை. வேத இலக்கியங்களில் பெருநகரங்களும் இல்லை, தாய்த்தெய்வ வழிபாடும் இல்லை. இவை இரண்டும் சிந்துவெளியிலும் இருக்கிறது. கீழடியிலும் இருக்கிறது. இவை அனைத்தையும் வைத்து சங்க காலத் தமிழர்களின் மூதாதையர் இருந்த இடமே சிந்துவெளி என்பதை நிறுவுகிறார் ஆர்.பாலகிருஷ்ணன்.

**"இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலத்தில் இருந்து தான் எழுதப்பட வேண்டும்"** - என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து சொல்லி வருகிறார். அவரது முன்னெடுப்பால் கீழடி, சிவகளை, ஆய்வுகள் வேகம் பிடித்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகளும், சிந்துச் சமவெளியை நமக்கு வெகு அருகில் கொண்டு வந்து கொண்டே இருக்கிறது. இத்தகைய பெருமைமிகு காலத்தில் சிந்துப் பண்பாட்டின் நூற்றாண்டு விழா கொண்டாடுவது பொருத்தமானதே!



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு கலந்துகொண்டு பேசினார். சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு பேசினார்கள்.

# புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடுதான் இந்தியாவுக்கு எழுதித் தர வேண்டும்!

## திராவிடப் பள்ளி 5-ஆம் ஆண்டு தொடக்க விழாவில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**திருச்சி, செப்.24 -**

**திருச்சி கரூர் சாலையில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் 21.09.2024 சனிக்கிழமை அன்று, நடைபெற்ற "திராவிடப்பள்ளி" 5ஆம் ஆண்டு தொடக்க விழாவில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, திராவிடப் பள்ளி நான்காம் ஆண்டுத் தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்!**

**இவ்விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆற்றிய உரை வருமாறு:-**

"இன்று இந்த நாடு, இந்த சமூகம், இந்த உலகம் ஒரு பாதையை நோக்கி ஓடிக் கொண்டிருக்கக் கூடிய, ஆட்சி அதிகாரத்திலே இருப்பவர்களின் கொள்கையை மற்றவர்கள் மீது திணிக்கக் கூடிய மதவாத அரசியலை, சாதி அரசியலை பிரிவினை உருவாக்கும் அரசியலை தொடர்ந்து செய்துகொண்டிருக்கக் கூடிய சூழலில்தான்... இன்று நாம் அத்தனை பேரும் நின்று கொண்டிருக்கிறோம்.

இந்த பிற்போக்குத் தனமான அரசியலை ஏன் நாம் எதிர்க்கிறோம் என்றால்... எத்தனையோ விதமான போராட்டங்களுக்குப் பிறகுதான் நாம் இங்குவந்துநிற்கிறோம். எத்தனையோ பெண்கள் இன்று கல்லூரிகளுக்கு சென்று படிக்கிறீர்கள் என்றால்... அதற்குப் பின்னால் எத்தனை போராட்டங்கள்! தோளில் சீலை போட எவ்வளவு விலை கொடுக்க வேண்டியிருந்தது?

**தியாகங்களை மறக்கக்கூடாது!**

அதே திருவிதாங்கூரில் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு மார்புக்காக வரி போட்டிருக்கிறார்கள். ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்கு சென்று வரி வசூலிக்கிறேன் என்று அதிகாரிகள் சென்று உட்கார்ந்துகொள்வார்கள். உன் மார்புக்கு வரி கொடு என்று சொல்லி அதிகாரிகள் செய்த தொந்தரவு தாங்காமல் நேராக உள்ளே போகிறாள்... ஒரு வாழை இலையை எடுத்து வைத்து தன் இரு மார்பகங்களையும் வெட்டி, அந்த வாழை இலையில் வைத்து இதுபோதுமா என்று அதிகாரியிடம் கொடுத்துவிட்டு, குருதி கொட்டியதால் கொஞ்ச நேரத்தில் அந்த பெண் மாண்டு போகிறார்.

இத்தனை விலையைக் கொடுத்துதான் இந்த இடத்தில் இவ்வளவு பெண்கள் அமர்ந்திருக்கிறோம். இந்த தியாகங்களை எல்லாம் மறந்துவிடக் கூடாது. இன்று யார் வேண்டுமானாலும் படிக்கலாம்.

ஒன்றிய அரசு புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருகிறார்கள். அதை நம் மீது திணிக்க முற்படுகிறார்கள், அவர்கள் இன்னும் முப்பது வருடங்கள் கழித்து கல்லூரிக்கு போகும் மாணவர்களை எத்தனை சதவிகிதம் ஆக்க வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்களோ அதை எப்போதோ கடந்து விட்ட மாநிலம் தமிழ்நாடு.

நியாயமாக புதிய கல்விக் கொள்கையை நாம் எழுதி அதாவது தமிழ்நாடுதான் எழுதி அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**தமிழ்நாட்டின் கல்விக் கொள்கை!**

பள்ளிக் கூடங்களில் நிறைய மாணவர்கள் இல்லையென்றால் அவற்றை மூடி ஒரே பள்ளிக் கூடமாக மாற்றுவதுதான் புதிய கல்விக் கொள்கை. ஆனால் தமிழ்நாடு ஒரே ஒரு மாணவியோ மாணவரோ இருந்தால் கூட அவர்களுக்காக பள்ளி நடத்தும் மாநிலம். குக்கிராமமாக இருந்தாலும் மலைகிராமமாக இருந்தாலும் ஒரே ஒரு மாணவராக இருந்தாலும் அவரைத் தேடி கல்வி செல்லும் என்பதுதான் தமிழ்நாட்டின் கல்விக் கொள்கை. இதுதான் திராவிடம்.

ஒரு காலகட்டத்தில் பெண்களை வெளியூருக்கு சென்று படிக்க அனுப்ப மாட்டார்கள். ஆண்களாக இருந்தால் கூட வசதி வாய்ப்பு இல்லையென்றால் யார் வீட்டிலும் தங்க வாய்ப்பில்லை என்று படிக்க வெளியூர் அனுப்ப மாட்டார்கள்.

அதனால் நீ போய் படிக்க அலைய வேண்டாம், உங்க ஊருக்குப் பக்கத்திலேயே கல்லூரியைக் கட்டுகிறேன் என்று கொண்டுவந்தவர் தலைவர் கலைஞர். இன்று உயர் கல்விக்கு செல்வோர் எண்ணிக்கை 50% தாண்டி தமிழ்நாடு திகழ்கிறது என்றால்



இதைப் பற்றி சிந்தித்த திராவிட தலைவர்கள்தான் காரணம்.

இதையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். என்னென்ன திட்டங்கள்., என்னென்ன தியாகங்கள், என்னென்ன சிந்தனைகள் இந்த இடத்தில் கொண்டு நம்மை நிறுத்தி யிருக்கிறது என்று தெரிந்துகொண்டால்தான், இன்று நம் கையில் கிடைத்திருக்கும் உரிமை, சுயமரியாதை, மதிப்பு மிகுந்த இடத்தை நாம், பொக்கிஷமாக தக்க வைக்க முடியும்.

**மறுக்கப்பட்ட உரிமையை தருவதற்காகத் தான்!**

ஒரு கம்ப்யூட்டர் முன்னாடி உட்கார்ந்துகொண்டு, 'எதுக்கு சாதி சர்டிபிகேட்?' அரசாங்கம்தானே சாதியை திணிக்குது?' என்கிறார்கள். சாதிச் சான்றிதழ் என்பது உன் சாதியை தெரிந்து கொள்வதற்கு கேட்கப்படுவது இல்லை. உனக்கு மறுக்கப்பட்ட உரிமையை கல்வியை தருவதற்காக அரசாங்கம் கேட்கக் கூடியதுதான் சாதிச் சான்றிதழ். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்காகத்தான் அண்ணன் சுப.வீ. அவர்கள் திராவிடப் பள்ளியைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு இளம் பெண்கள் இன்று வந்திருக்கிறீர்கள். பாசிசமாக இருக்கட்டும், மதவாத அரசியலாக இருக்கட்டும், அடிப்படை வாதமாக இருக்கட்டும். எதுவாக இருந்தாலும் அது இந்த சமூகத்தில் உரையாடல்களை குறைத்துக் கொண்டிருக்கிறது. யாரும் யாருடைய கருத்தையும் எதிர்த்து வெளிப்படையாகப் பேச முடியவில்லை. ஒரு கருத்தை சொன்னால் பெரும்பான்மை சமூகத்தின் மனதை புண்படுத்தும் வகையில் இருக்கிறது என்பார்கள். ஆனால் அவர்கள் பேசும்போது தமிழ்நாட்டின் அத்தனை உணர்வுகளையும் புண்படுத்தும் வகையில் பேசுவார்கள்., தமிழ்நாடு என்று சொல்லாதே என்பார்கள். பெண்களுக்கு எதிராக கருத்துகளை சொல்லுவார்கள்.

ஒவ்வொரு முறையும் பெண்கள் மீது பாலியல் தாக்குதல் நடத்தப்படும் போது அவர்கள் கேட்கும் கேள்வி, 'அந்தப் பெண்கள் ஏன் செல்போன் வச்சிருந்தாங்க? அந்த பெண் ஏன் அண்ணா என்னை விட்டுடுனு சொல்லலை? இனிமேல் பெண்கள் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது. 'இதெல்லாம் பி.ஜே.பி.யில் இருக்கும் தலைவர்கள் தொடர்ந்து சொல்லக் கூடிய கருத்துகள்.

எந்த விதமான அடிப்படை வாதமும் பெண்களுக்கு எதிரானதாகத்தான் இருக்கும். அவற்றால் முதலில் பாதிக்கப்படக் கூடியது பெண்கள்தான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**பெரியாரின் அறிவுரை!**

பெண்கள் இந்த உடையைத்தான் உடுத்த வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். ஆனால் பெரியார் என்ன சொன்னார் என்றால். உன்னுடைய உடையை உனக்கு வசதியான உடையை நீ தீர்மானி. உனக்கு முடி வளர்த்துக் கொள்ள விரும்பினால் வளர்த்துக் கொள், வெட்டிக் கொள்ள விரும்பினால் வெட்டிக் கொள். எதையும் உனக்கு தடையாக மாற்ற விடாதே...

நான் ஒரு கல்லூரிக்கு சென்றபோது அங்கே நிர்வாகியிடம், 'என்ன மேடம்... எல்லாருமே சுடிதார் போட்டிருக்காங்க, துப்பட்டா போட்டிருக்காங்க?' என்று கேட்டேன். டிரஸ் கோடு வச்சிருக்கீங்களா என்று கேட்டேன். தயவு செய்து மேடையிலே சொல்லிடாதீர்கள் என்றார்கள். அதை எப்படி விட முடியும் என்று மேடையிலேயே கேட்டுவிட்டேன்.

பெண்கள் மீது திணிக்கப்படும் முக்கியமான ஒன்று, 'ஒரு ஆண் உன்னைப் பார்க்கும் விதத்துக்கு நீதான் பொறுப்பு' என்பது. நீ நல்லா டிரஸ் போட்டீனா உன்னை யாரும் பாக்க மாட்டார்கள், நீ சரியான நேரத்துக்கு போயிட்டு வந்துட்டா பாதுகாப்பாக இருப்பாய். இதைவிட ஒரு பொய் உலகத்திலேயே கிடையாது.

அதனால் தயவு செய்து பெண்களுக்கு என்று தனியாக டிரஸ் கோடு உருவாக்குவதை விட்டுவிடுங்கள். ஏனென்றால் பெண்கள் என்ன உடுத்துகிறீர்கள் என்பதில் இருந்து ஆரம்பிக்கிறது உங்களுடைய உரிமை. உங்களுடைய சுதந்திரம். அதற்குப் பிறகு தான் என்ன படிப்பது, வாழ்க்கையின் முடிவுகளை எடுப்பது எல்லாம்.

அடிப்படைவாதம், மதவாதம்தான் பெண் என்பவள் ஆணுக்குக் குறைந்தவள், பெண் எப்படி நடந்துகொள்கிறாள் என்பதைப் பொறுத்தே அவளது நிலை அமையும் என்றெல்லாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறது. அதாவது பெண்ணின் உடல், மனம் எதுவும் அவளது கட்டுப்பாட்டில் இல்லை என்பதைத்தான் அவர்கள் உருவாக்கிக் காட்டுகிறார்கள். அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இங்கே கூட, மேடையில் நான் ஒரு பெண் மட்டுமே இருப்பதாக சொன்னார்கள். பல மேடைகளில் பெயருக்கு என ஒரு பெண்தான் இருப்பார்கள். ஐயா சுப.வீ. அவர்கள் சொன்னார், 'இவர்கள் பல முகங்கள் உடையவர்கள். அதனால் ஒரு பெண்ணாக பார்க்கவில்லை. பல பெண்ணாக பார்க்கிறேன் என்று சொன்னார். வேண்டாம். அப்படிப் பார்த்தால் தலைவர் கலைஞர் இருந்த மேடையில் அவர் மட்டும்தான் இருந்திருக்க வேண்டும். மற்றவர்கள் எல்லாம் பெண்களாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் அப்படி ஒரு பன்முகத் தன்மைக் கொண்ட மனிதரை யாரும் பார்க்க முடியாது. அதனால் இந்த பாராட்டு எங்களுக்கு வேண்டாம். எங்களுக்கு இடம்தான் வேண்டும்.

**ஒன்றிய அரசின் கண்துடைப்புகள்!**

ஒன்றிய அரசு ஒரு அழகான இட ஒதுக்கீட்டு மசோதாவை கொண்டுவந்தார்கள். பெண்ளுக்கு எப்போது அது பயன் தரும், எப்போது அது நடைமுறைக்கு வரும் என்றெல்லாம் தெரியாத இட ஒதுக்கீட்டு மசோதா.

அதனால் இந்த கண்துடைப்புகள் தான் இந்த சமூகத்திலே பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிற விதியாக இருக்கிறது. அதை உடைத்து முன்னேற வேண்டும். பெண்களின் கனவுகள், லட்சியங்களுக்கு எதுவும் தடையாக இருக்க கூடாது என்று சொன்னவர் தலைவர் தந்தை பெரியார்.

வேறு எந்தத் தலைவரும் இந்த அளவுக்கு, சிறு தயக்கமும் இல்லாத அளவுக்கு பெண்ணுரிமை பேசிய தலைவரை நான் பார்த்ததில்லை.

இந்த சமூகத்தில் சாதி சாதி என்று பேசுகிறோம். பெயருக்குப் பின்னால் சாதிப் பின்னொட்டு போடாமல் அது பற்றி பேசாமல் இருந்த சமூகத்தில் இன்றைக்கு சில பேர் சொல்லக் கூடிய கருத்துளால், 'வெளியே கல்யாணம் பண்ணிக் கொடுத்துடக் கூடாது... எங்கள் சாதி. எங்கள் குழுமம் என்றெல்லாம் இப்போது பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

சாதி என்பதைப் போல உலகத்திலேயே பொய் வேறு எதுவும் இருக்க முடியாது. ஏனென்றால் அறிவியல் ஆய்வுகளின்படி முதன்முதலில் மனித இனம் தோன்றியது ஆப்பிரிக்காவில். கிட்டத்தட்ட 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால் அங்கே வாழ்ந்த பெண்ணின் E ஜீன் தான் இன்று உலகம் முழுதும் உள்ள 147 எல்லா மனித இனங்களிலும் மரபியல் தொடர்பு கொண்டிருக்கிறது என்று ஆய்வு செய்து பார்த்ததில் கண்டறியப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவில் உருவான மனித இனம் உலகம் முழுதும் பரவியிருக்கிறது. இதில் எங்கே சாதி வந்தது?

**மறு சீராய்வு செய்வோம்!**

அதனால் இந்த அறிவியல் கேள்விகளை முன் வைக்கக் கூடிய ஒன்றுதான் இந்த திராவிடப் பள்ளி. வழி வழியாக நமக்கு சொல்லித் தரக் கூடிய சாதி, பெண்ணடிமைத் தனம், மதம், மதத்தைச் சுற்றி இருக்கக் கூடிய யாருமே கேள்வி கேட்டுவிடக் கூடாது என்ற விஷயங்கள், இந்த சமூக அடுக்குகளில் இருக்கும் விஷயங்கள் எல்லாவற்றையும் மறு சீராய்வு செய்ய வேண்டிய காலகட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

எப்படி பெரியார், வேறு யாரும் செய்ய முன்வராததால் இதை நான் செய்கிறேன் என்று சொன்னாரோ அதைப் போல... திராவிடப் பள்ளி வேறு யாரும் செய்ய முன்வராத ஒன்றை தன் தலையில் வைத்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஏன் பள்ளி நடத்த வேண்டும் என சிலர் கேட்கிறார்கள். அவர்கள் ஷாகாக்கள் நடத்துகிறார்கள். நாம் பள்ளி நடத்துகிறோம். அவர்கள் மக்களை வெவ்வேறு வழிகளில் அணுகிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வழி கல்வி, அறிவு என்பது. அதனால் அந்த வழியிலே மக்களை நாம் நாடிச் செல்கிறோம், தேடிச் செல்கிறோம். இதுதான் பெரியார் நமக்கு சொல்லித் தந்த வழி.

**திராவிடம் என்றால் மனித நேயம்!**

திராவிடம் என்பது ஏதோ ஓர் இடத்தைச் சேர்ந்தது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, கேரளா என்பது கிடையாது. ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு வார்த்தைக்கு ஒவ்வொரு அர்த்தம் இருந்திருக்கும். அது காலப் போக்கிலே மாறிக் கொண்டே வரும். இன்று நாம் பார்க்கும்போது அந்த வார்த்தைக்கும் இந்த வார்த்தைக்கும் சம்பந்தமே இருக்காது. அப்படி திராவிடம் என்பது இன்று மிகப்பெரிய பரிணாம வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது. திராவிடம் என்பது இடம் சார்ந்தது அல்ல. பெரிய சிந்தனையாக தத்துவமாக உருவாகியிருக்கக் கூடிய ஒன்றுதான் திராவிடம்.

நம்முடைய முதலமைச்சர் சொல்கிறாரே... எல்லாருக்கும் எல்லாம் என்று. இந்த நாட்டில் 'அனைவரையும் உள்ளடக்கிய' என்பதே மாறிக் கொண்டிருக்கிறது. வெளியேற்றுதல்தான் நடந்துகொண்டிருக்கிறது. அம்பானி, அதானி தவிர யாரும் சம்பாதிக்க முடியாது. அவர்கள் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் எல்லாருக்கும் கல்வி, எல்லாருக்கும் உரிமைகள், எல்லாருக்குமான சுய மரியாதை, எல்லாருக்குமான எதிர்காலம். எல்லாரும் சமம். அது ஆணாகட்டும், பெண்ணாகட்டும், எந்த இடத்தில் பிறந்தவர்களாக இருக்கட்டும், எந்த இனத்தில் பிறந்தவர்களாக இருக்கட்டும், எல்லாரையும் மனிதனாக நேசிப்பது இதுதான் திராவிடம். திராவிடம் என்றால் மனித நேயம். மக்களை மனிதர்களை நேசி.

தமிழர்கள் எந்த காலத்தில் எதையும் கேள்வி கேட்காமல் இருந்ததில்லை. போய் சித்தர் பாடல்களைப் படியுங்கள். அவர்கள் கேட்காத கேள்விகள் கிடையாது. அவர்கள் கேட்காத சாதி மறுப்பு, கடவுள் மறுப்பு கிடையாது. இன்றைக்கும் நாம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து கேள்வி கேட்க வேண்டும் என்றுதான் திராவிடப் பள்ளி நடத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் எதிர்காலம், நாம் தேடிப் பெற்ற, போராடிப் பெற்ற உரிமைகளை காப்பாற்றுவது உங்கள் கைகளில் இருக்கிறது.

அதனால் இந்த திராவிடப் பள்ளியின் கொள்கைகளை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை, திராவிட இயக்கத்தின் கொள்கைகளை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், முதலமைச்சர் தளபதி ஆகியோர் கொண்டிருக்கக் கூடிய அனைவருக்கும் எல்லாம் என்ற கொள்கையை தாங்கிச் செல்லக் கூடியவர்களாக இந்த சமூகத்திலே நாம் பணியாற்ற வேண்டும்.

யாரும் தமிழ்நாட்டுக்குள் வந்து நம்மை பிரித்துவிடக் கூடாது, என்பதிலே அரணாக நின்று போராட வேண்டும். நன்றி."

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

இந்நிகழ்வில் அமைச்சரும், கழக முதன்மை செயலாளருமான கே.என். நேரு, அரசு கொறடா கோவி செழியன், திராவிடப்பள்ளி நிறுவனர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், மாவட்ட கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், என்.ஆர். ஐஏஎஸ் அகாடமி நிறுவனர் விஜயாலயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.